DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.

**Case No.** **S.T.C.No. 725/2023**

Deposition of **PW- 2/ LW-2**

| | | |
|---|---|---|
| Name | : | பாலாஜி |
| Father's Name | : | வடமலுராஜ் |
| Village | : | போடிநாயக்கனூர் |
| Taluk | : | போடிநாயக்கனூர் |
| Calling | : | முதல்நிலைக்காவலர் |
| Religion | : | இந்து |
| Age | : | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **27 day of March 2025.**
எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்சமயம் போடி நகர் காவல்நிலையத்தில் முதல்நிலைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.07.2023 ம் தேதி போடி நகர் காவல்நிலையத்தில் முதல்நிலைக்காவலராக பணியில் இருந்த போது நானும், போடி நகர் சார்பு ஆய்வாளர்மற்றும் அசா 1 மும், அவர்களுடன் போடி நகர் மதுவிலக்கு குற்ற தடுப்பு சம்மந்தமாக போடி குப்பிநாயக்கன்பட்டி அறிவுதிருக்கோவில் அருகில் காலை 6.00 மணிக்கு வாகன தணிக்கை செய்தோம். வாகனதணிக்கை செய்யும் போது பின்னர் பெயர் விலாசம் தெரிந்துக்கொண்ட தேவர் காலணியை சேர்ந்த நடராஜன் மகன் சுதாகர் என்பவர் TN 59 CA 5661 பஜாஜ் CT 100 வண்டியில் வரும் போது வாகனதணிக்கை செய்யவிடாமல் தடுத்தார் . ஆஜர் எதிரி தான் இருசக்கரவாகனத்தை ஓட்டி வந்தவர் . அப்போது நானும் என்னுடன் இருந்த அசா1 மும் வாகனத்தை மறித்து வாகனத்தை சோதனை செய்யும் போது வண்டியில் முன்னால் வைத்திருந்த பிளாஸ்டிக் சாக்கு பையில் 180 எம்எல் கொண்ட எக்ஸ்பிரஸ் பிராந்தி பாட்டில் -4, ஓல்டு செப் பிராந்தி

பாட்டில் –3, ஓரியன் பிராந்தி பாட்டில் – 1 மொத்தம் 8 பிராந்தி பாட்டில்களை வைத்திருந்தார். காலை 6.00 மணிக்கு டாஸ்மாக் கடை முடியிருந்தநிலையில் அவரது பையில் 8 பாட்டில்கள் இருந்தது. டாஸ்மாக் முடியநேரத்தில் அவர் கையில் 8 பாட்டில்கள் இருந்ததால் காரணம் கூறி சார்பு ஆய்வாளர் அவரை கைது செய்தார் . எதிரியிடமிருந்து 8 பாட்டில்களையும், இருசக்கரவாகனத்தையும் சார்பு ஆய்வாளர் முன்னிலையில் 6.30 மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும் அசா 1ம் சாட்சி கையொப்பம் செய்தோம் . அத்தாட்சியில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது. **அத்தாட்சியில் உள்ள 2 வது கையொப்பம் அசாஆ.2**.

பின்பு அவரை சார்பு ஆய்வாளர் கைதுக்கான காரணத்தை கூறி கைது செய்தார். எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துகளுடன் நிலையம் வந்தோம். பின்பு போடி நகர் காவல்நிலைய குற்றஎண் . 262/2023 ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது . சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சம்பவம் நடைபெற்ற அன்று எத்தனை மணிக்கு போடி நகர் காவல்நிலையத்திலிருந்து கிளம்பினோம் என்றால் காலை 5.45 மணிக்கு. யார் யார் சென்றோம் என்றால் நான், சார்பு ஆய்வாளர், வீரமுத்து ஆகியோர் சென்றோம். என்ன என்ன எடுத்து சென்றோம் என்றால் நானும அசா 1ம் ஒரு இருசக்கரவாகனத்திலும், சார்பு ஆய்வாளர் அவரது வாகனத்திலும் சென்றோம். போடிநகர் காவல்நியைத்திலிருந்து வாகனதணிக்கை நடைபெற்ற இடத்திற்கு எவ்வளவு நேரத்தில் சென்றோம் என்றால் 10 நிமிடத்தில் சென்றோம். நாங்கள் மூவரும் இரண்டு சக்கரவாகனத்தை தவிர வேறு எதையும் எடுத்து செல்லவில்லை எனறால் சரிதான் . எதிரியை முதன் முதலில் யார் பார்த்தோம் என்றால் 3 பேரும் பார்த்தோம். நாங்கள் பார்க்கும் போது எதிரியுடன் யார் யார் இ ருந்தார்கள் என்றால் அவர் மட்டும் தான் இருந்தார். எதிரியை சார்பு ஆய்வாளர் கைது செய்யும் போது நேரம் என்ன இருக்கும் என்றால் காலை 6.30 மணி இருக்கும். எதிரியை கைது செய்வதற்கு முன்பு அத்தாட்சி தயார் செய்யப்பட்டதா என்றால் ஆமாம். தயார் செய்யப்பட்டு கைப்பற்றப்பட்டது . காலை 6.30 மணி என்பதால் அந்த இடத்தில் கடைகள் திறந்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரிதான். அப்படிப்பட்ட சூழ்நிலையில் எழுதுவதற்கு பேனா பேப்பர் எங்கிருந்து வந்தது என்றால் எங்களது வாகனங்களில் பேனா ,பேப்பர்

எப்போதும்இருக்கும். நான் சொன்னது போல் சம்பவம் நடைபெற்ற இடத்தில் வாகணதணிக்கை செய்த போது அத்தாட்சி தயார் செய்யப்பட்டு பொருள் கைப்பற்றப்பட்ட பின்பு தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மதுவிலக்கு சம்மந்தமாக மதுவிலக்கு அமலாக்கபிரிவு தனியாக உள்ளது என்றால் சரிதான் . மதுபாட்டில் தொடர்பான குற்றங்களுக்கு அவர்கள் தான் நடவடிக்கை எடுக்க இயலும் என்றால் மதுவிலக்கு அமலாக்கபிரிவு உத்தமபாளையத்தில் இருப்பதால் அவர்கள் வர காலதாமதம் ஆகும் என்பதால் தகவல் கிடைத்தததும்நாங்கள சென்ற தணிக்கை செய்தோம். பொதுவாக ஒரு இந்திய குடிமகன் எவ்வளவு மதுபாட்டில் வைத்திருக்க அனுமதிக்க என்ன விதி உள்ளது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும் . வாகனதணிக்கை நடைபெற்றதாக சொல்லப்படும் பகுதி மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான், காலை நேரம் என்பதால் குறைவான நபர்கள் தான் இருந்தார்கள். குடியிருப்பு பகுதி அதிகமாக உள்ள பகுதி என்றால் சரிதான். காலை நேரம் என்பதால் மக்கள் நடமாட்டம்அதிகமாக இருக்காது என்ற சூழ்நிலையில் உத்தமபாளையத்திலிருந்து தகவல் கிடைத்து நாங்கள் சென்றோம் என்றால் சரியல்ல, எங்களுக்கு நேரடியாக தகவல் கிடைத்து சென்றோம். குறிப்பிட்டு அத்தாட்சியை யார் எழுதியது என்றால் சார்பு ஆய்வாளர் காலை 6.30 மணிக்கு எழுதி முடித்தார். நான் அத்தாட்சியில் கையெழுத்து செய்யும் போது எத்தனை மணி இருக்கும் என்றால் 6.30 மணி இருக்கும். எதிரியை சந்தித்ததாக சொல்லும் நேரத்தில் எவ்வளவு நேரம் எதிரியுடன் பேசியிருப்பேன் என்றால் சுமார் 15 நிமிடம். நான் முதல் விசாரணையில் சொன்னது போல்எந்த குற்றசெயலும் நடக்கவில்லை என்றும் , எதிரி குற்றசம்பவத்தில் ஈடுபடவில்லை என்று சொன்னால் சரியல்ல . எதிரி குற்றமற்றவர் என்றால் சரியல்ல. நான் சார்பு ஆய்வாளரின் வேண்டுகோளுக்கிணங்க புள்ளிவிபர கணக்கிற்காக வழக்கு பதிவு செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Bodinayakanur.